1995 ஏப்ரல் 18]

(அ) நீலகிரி மாவட்டத்தில் கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு என அந்தந்தப் பகுதியில் குடியிருப்பு கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள 85 கிராம நிருவாக அலுவலர்களுக்கு அலுவலகம் சார்ந்த குடியிருப்பு கட்ட 1993–94 பகுதி 2 திட்டத்தின் கீழ் 10 (பத்து)–ம், 1994–95–ஆம் பகுதி 2 திட்டத்தில் 5–ம் (ஐந்து) அரசால் உத்தரவிடப்பட்டு கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கிராம நிருவாக அலுவலர்களுக்கு ஆண்டுதோறும் நிதிநிலைக்கேற்ப அலுவலகம் சார்ந்த குடியிருப்பு கட்டப்படும்.

323—

வெள்ளச்சந்தை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

22610—திரு. **ஆ. பாலையா:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியம், வெள்ளச்சந்தை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டிக் கொடுப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டபின் அரசு ஆவன செய்யும்.